UNITED NATIONS
SRI LANKA
TOGETHER FOR SUSTAINABLE DEVELOPMENT

# இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிடும் உயிர்த்தெழுந்த ஞாயிறு  தாக்குதல்கள் தொடர்பான அறிக்கை

**2019 ஏப்ரல் 21 (கொழும்பு, இலங்கை)** - இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பானது உயிர்த்தெழுந்த ஞாயிறன்று  வழிபாட்டு தலங்கள் மற்றும் விடுதிகளில் பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை வன்மையாக கண்டிக்கிறது. இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பானது குடும்பத்தினர்,பாதிக்கப்பட்டோர், இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு காயமடைந்தோர் விரைவில் குணமடைய வேண்டுமென வேண்டுகிறது. இலங்கை மக்களின் ஒற்றுமையை குறைக்கும் நோக்கிலேயே இவ்வகையான தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் அமைப்பானது அதிகாரிகள் மற்றும் அனைத்து மக்களையும் சட்ட ஒழுங்கு நிலை நிறுத்தப்படுவதையும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் அனைவருக்குமான பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறது.